# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2095/44 - 2018 නොවැම්බර් මස 02 වැනි සිකුරාදා - 2018.11.02

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கோவை இலக்கம்: GAL/LAN/ACQUIS/A13/34.
காணி அமைச்சின் கோவை இலக்கம்: 4-3/9/2016/WS/ 70.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், கலிகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், கந்துபிட்ட பத்துவ வடக்கு சிறு பிரிவில், இல. 71, கொப்பேவல கிராம அலுவலர் பிரிவில் கொப்பேவல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கே. 3626 ஆம் இலக்க மற்றும் 2018.10.11 ஆந் திகதிய ஆரம்ப வரைபடத்திற்கேற்ப மொத்த அளவில் 0.0766 ஹெக்டயார் அளவிலான காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

1. துண்டு இல. 1

காணியின் பெயர்: கந்தேஹேன; உரிமை கோருபவர்: எஸ். எம். நிமல் கருணாதிலக்க, இல. 569/108, பண்டாரநாயக்க இடம், கலகெடி ஹேன, திஹாரிய; விஸ்தீரணம்: 0.0007 ஹெக்டயார்.

2. துண்டு இல. 2

காணியின் பெயர்: கந்தேஹேன; உரிமை கோருபவர்: எஸ். எம். நிமல் கருணாதிலக்க, இல. 569/108, பண்டாரநாயக்க இடம், கலகெடி ஹேன, திஹாரிய; விஸ்தீரணம்: 0.0756 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கலிகமுவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எச். எம். ஸீ. சுஸன்த ஹேரத்,
பிரதேச செயலாளர்,
கலிகமுவ.

பிரதேச செயலகம்,
கலிகமுவ,
2018, ஒற்றோபர் 31.

11 - 726


1A - G 28838 - 17 (2018/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*